**நுகர்வோர் கடன் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட வாடகை கொள்வனவு உடன்படிக்கை**

**உடன்படிக்கை இல. 0110827929**

**இந்த வாடகை கொள்வனவு உடன்படிக்கையானது, முதலாம் பகுதி** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் கூட்டிணைக்கப்பட்டதும், பதிவிலக்கம் பீகிவ் 67ஐக் கொண்டதும் மற்றும் இல.84, ரஜ வீதி, கண்டி என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான **சென்ட்ரல் பைனான்ஸ் கம்பனி பீஎல்சீ** (இதனகத்துப் பின்னர் "**உரிமையாளர்**" என்று குறிப்பிடப்படுகிற இங்கு பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய சொல் அல்லது வெளிப்பாடு சூழமைவு அவ்வாறு வேண்டுகின்ற போது அல்லது அனுமதிக்கும் இடங்களில் **சென்ட்ரல் பைனான்ஸ் கம்பனி பீஎல்சீ**, அதன் பின்னுறுபவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சாட்டுதல்காரர்களைக் குறிக்கும் மற்றும் உள்ளடக்கும்) நிறுவனத்திற்கும் மற்றும்

**இரண்டாம் பகுதி** இங்கே அட்டவணை (அ) இன் விடயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்/நபர்கள்/நிறுவனம்/நிறுவனங்கள் (இதனகத்துப் பின்னர் "**வாடகை பெறுநர்**" எனக் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய சொல் அல்லது வெளிப்பாடு சூழமைவு அவ்வாறு வேண்டுகின்ற போது அல்லது அனுமதிக்கும் இடங்களில் ஒரு நபர் அல்லது நபர்களின் விடயத்தில், அத்தகைய நபர் அல்லது நபர்களையும் மற்றும் அவரது அல்லது அவர்களின் பின்னுரித்தாளர்கள், நிறைவேற்றுனர்கள், நிர்வாகிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சாட்டுதல்காரர்களையும் மற்றும் ஒரு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் விடயத்தில், அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களையும் மற்றும் அதன் அல்லது அவற்றின் பின்னுறுபவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சாட்டுதல்காரர்களையும் குறிக்கும் மற்றும் உள்ளடக்கும், ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்படுகின்றது, என்பதோடு

வாடகை பெறுநரின் வேண்டுகோளின் பேரில், உரிமையாளர் இங்கே அட்டவணை (அ) இன் விடயம் 2 இல் நன்கு முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ("உபகரணங்கள்") உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளார் மற்றும்/அல்லது கொள்வனவு செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளார் மற்றும்/அல்லது உபகரணங்களை விநியோகித்துள்ளார் மற்றும் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் மற்றும் திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தில் ("சட்டம்") குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படியும், வாடகை பெறுநருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். மேலும்

இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னர், குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 3(1) க்கு இணங்க, உரிமையாளர் எழுத்துப்பூர்வமாக வாடகை பெறுநருக்கு முகவரியிட்டு, வாடகை பெறுநரால் காசுக்கு உபகரணத்தை கெள்வனவு செய்யக் கூடிய விலையை ("ரொக்க விலை") குறிப்பிட்டுள்ளார்.

**இப்போது இந்த உடன்படிக்கை பின்வருவனவற்றிற்கு அத்தாட்சியாக உள்ளது**: இவ்வுடன்படிக்கையின் ஒவ்வொரு தரப்பினரையும் கருத்தில் கொண்டு, இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படுகின்றவாறான அவர்களின் உரிய கடப்பாடுகளை மேற்கொள்தல், பின்பற்றுதல் மற்றும் புரிதலில் தரப்பினர் பின்வருமாறு உடன்படுகின்றனர்:

**1. உபகரணங்களை வாடகைக்கு விடுதல்**

அ) அட்டவணை (அ) இன் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தின் போது, அட்டவணை (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகையை விடாமுயற்சியுடன் மற்றும் சரியான நேரத்தில் செலுத்துவதற்கும், மற்றும் இந்த ஒப்பந்தத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடகை பெறுநரால் நிறைவேற்றுதலுக்கு உரிய முறையில் கடைப்பிடிப்பதற்கும் அமைவாக உபகரணத்தை உரிமையாளர் இதன் மூலம் வாடகைக்கு விடுவதற்கு ஒப்புக்கொள்கிறார் என்பதோடு வாடகைபெறுநர் இதன் மூலம் உபகரணத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு ஒப்புக்கொள்கிறார்,

(ஆ) இந்த உடன்படிக்கையின் கீழ் வாடகை பெறுநருக்கு உபகரணங்களை வழங்கும் விதம் மற்றும் வாடகை பெறுநரால் உபகரணங்களை ஏற்றுக்கொள்ளும் விதம் ஆகியவை இதன் அட்டவணை (அ) இல் நன்கு விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2. உபகரணத்தின் பாதுகாப்பு, பயன்பாடு, பராமரிப்பு மற்றும் மாற்றங்கள் தொடர்பான வாடகை பெறுநரின் கடப்பாடுகள்**

அ) இதன் இந்த பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள எற்பாடுகளுக்கு மேலதிகமாக, இந்த உடன்படிக்கையின் காலப்பகுதியில், அவ்வப்போது, இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலும், உரிமையாளரால் வாடகை பெறுநருக்கு வழங்கப்படக்கூடிய எழுத்துப்பூர்வ வழிகாட்டுதல்களின்படியும், வாடகை பெறுநர் உபகரணங்களைப் பயன்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் வேண்டும்.

ஆ) வாடகை பெறுநர், இந்த உடன்படிக்கையின் அட்டவணை 1இன் 6ஆம் விடயத்தில் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, அது எந்த நோக்கத்திற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதோ, அதற்காக மட்டுமே உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும், மேலும் உபகரணம் பயன்படுத்தப்படுகின்ற நோக்கத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், உரிமையாளருக்கு எழுத்துப்பூர்வமாக உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

இ) இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்காத நோக்கங்களுக்க பொருட்களை வாடகை பெறுநர் பயன்படுத்தினால், அத்தகைய பயன்பாட்டிலிருந்து அல்லது பயன்பாட்டின் போது உபகரணங்களுக்கு ஏற்படும் எந்தவொரு சேதத்திற்கும் உரிமையாளருக்கு இழப்பீடு செலுத்த வாடகை பெறுநர் பொறுப்பாவார்.

ஈ) வாடகை பெறுநர் இவ்வுடன்படிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்ட உபகரணத்தை தனது சொந்த உபகரணத்திற்காக சாதாரண அறிவுள்ள நபர் எடுத்துக் கொள்ளும் முன்னேற்பாட்டைப் போலவே, இவ்வுபகரணத்தையும் அதிக கவனத்துடன் பராமரிக்க கட்டாயப்படுத்தப்படுவார்.

உ) மேலே உள்ள பிரிவு 2(ஈ) இல் நன்கு விரிவாக விளக்கப்பட்டுள்ளபடி, உபகரணங்களை கவனித்துக் கொள்ளத் தவறியதால் ஏற்படும் எந்தவொரு சேதத்திற்கும், வாடகை பெறுநர் உரிமையாளருக்கு இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டிருப்பார்.

ஊ) உபகரணங்களில் ஏதேனும் இழப்பு, அழிவு அல்லது சிதைவு ஏற்பட்டிருந்தால், மேலே உள்ள பிரிவு 2(ஈ) இல் நன்கு விரிவாக விளக்கப்பட்டுள்ளபடி, உபகரணங்களை அவர் கவனித்துக்கொண்டார் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு வாடகை பெறுநருக்கு உள்ளது.

எ) வாடகை உடன்படிக்கை தொடரும்போதோ அல்லது அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்திலோ, வாடகை பெறுநர் எல்லா நேரங்களிலும், உபகரணங்களால் அல்லது அது தொடர்பாக ஏற்படும் விபத்து அல்லது நிகழ்விலிருந்து எழும் மூன்றாம் தரப்பினரால் செய்யப்படும் அனைத்து நியாயமான உரிமைகோரிக்கைகளுக்கும் நட்டஈடு செலுத்த வேண்டும், சரிசெய்ய வேண்டும், நிறைவேற்ற வேண்டும், மேலும் இந்த உடன்படிக்கையின் பிரிவு 4 இல் நன்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகோரிக்கைளிலிருந்தும் உரிமையாளரை விடுவித்து இழப்பீடு வழங்க வேண்டும்.

(ஏ) வாடகை பெறுநர், உபகரணத்தின் பயன்பாடு, செயல்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றிலிருந்து அல்லது அதனுடன் தொடர்புடையதாக எவ்வாறு தோன்றினாலும் அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அபாயங்களையும் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்கிறார். மேலும், வாடகை பெறுநரின் முகவர்கள், பணியாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர் எனப் பொதுவாக எவருக்கும் ஏற்படுகின்ற காயம் அல்லது மரணம், அதுபோலவே உபகரணத்திற்கு ஏற்படுகின்ற சேதம் ஆகியவை, அவை எவ்வாறு ஏற்பட்டிருந்தாலும் அல்லது அந்த பயன்பாடு, செயல்பாடு அல்லது களஞ்சியப்படுத்தலுடன் தொடர்புடையதாக இருந்தாலும், அவற்றிற்கான முழு பொறுப்பும் வாடகை பெறுநருக்கே உண்டு.

(ஐ) இந்த உடன்படிக்கையில் ஏதேனும் எவ்வாறு இருந்த போதிலும், வாடகை பெறுநர், உபகரணத்தைத் தேர்ந்தெடுப்பதில் உரிமையாளரின் திறமை மற்றும் தீர்ப்பை அல்லது விநியோகத்தரைத் தேர்ந்தெடுப்பதில் உரிமையாளரின் தலையீட்டையோ அல்லது உபகரணத்தின் விவரக்குறிப்பையோ நம்பியிருக்க மாட்டார் என்பதை வாடகை பெறுநர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

### 3. உபகரணத்தின் உரித்து மற்றும் உடைமை

அ) இந்த உடன்படிக்கையின் காலப்பகுதியில் உபகரணங்களுக்கான முற்றுரிமை மற்றும் உடமை உரிமையாளருக்கே இருக்கும் என்பதை வாடகை பெறுநர் ஒப்புக்கொள்கிறார், அதன்படி, வாடகை பெறுநர் உபகரணங்களை விற்பனை செய்யவோ, துணைவாடகைக்கு விடவோ அல்லது சாட்டுதல் செய்யவோ அல்லது எந்தவொரு வில்லங்கம், அடைமானம் அல்லது வாக்குறுதியை நிறைவேற்றவோ அல்லது உபகரணத்ததுக்கான இந்த உடன்படிக்கையின் கீழ் உரிமையாளரின் உரித்தைக் குறைக்கின்ற ஏதேனும் செயலைச் செய்தல் மற்றும் இந்த உடன்படிக்கையின் கீழ் அதனை வாடகைக்கு விடுதலோ கூடாது. இந்த உறுதிமொழிகளை மீறுவது, திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் பிரிவு 17 இல் குறிப்பிடப்பட்டுள்வாறு குற்றவியல் நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

ஆ) வாடகை பெறுநர் சகல சந்தர்ப்பங்களிலும், வாடகைக்கு பெற்றுக் கொண்ட உபகரணத்தை தனது வசம் மற்றும் அவரது/அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்திலும் வைத்திருக்க வேண்டும்.

இ) உபகரணங்கள் வைக்கப்பட வேண்டிய இடம் அட்டவணை அ இன் விடயம் (7) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4. இழப்பீடு

அ) வாடகை பெறுநர், குறித்த உபகரணத்திலிருந்து அல்லது அதன் பயன்பாடு, இயக்கம், களஞ்சியப்படுத்தலிலிருந்து அல்லது அவற்றின் குற்றச்சாட்டான பயன்பாடு, இயக்கம் அல்லது களஞ்சியப்படுத்தல் தொடர்பாக, வாடகை பெறுநர் அல்லது அவரது ஊழியர்கள் அல்லது முகவர்கள் மூலம் ஏற்படும், சம்பந்தப்படும் அல்லது அதனுடன் தொடர்புடையதாக எழுகின்ற எவரேனும் நபரால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் மற்றும் சகல உரிமைக்கோரிக்கைகள், அபராதங்கள், சேதங்கள், இழப்புக்கள் என்பவற்றை உரிமையாளர் அனுபவிக்க நேரிடுமானால், அத்தகைய சகல கோரிக்கைகளிலிருந்தும் உரிமையாளரை எப்போதும் விடுவித்து, அவற்றுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். மேலும், உரிமையாளருக்கு எதிராக யாரேனும் ஒருவர் எந்தவொரு நீதிமன்றம், மத்தியஸ்தசபை, மன்றம், நபர் அல்லது அமைப்பு முன் மேற்கொள்ளும் நடவடிக்கை, வழக்கு அல்லது நடவடிமுறை தொடர்பாக உரிமையாளரின் வழக்குச் செலவுகள் மற்றும் எனைய செலவுகள் அனைத்தையும் வாடகை பெறுநர் பொறுப்பேற்க வேண்டும். அதுபோலவே, உரிமையாளருக்கு எதிராக வாடகை பெறுநருடன் கூட்டாக

அல்லது வேறுவகையில் வழங்கப்பட்டிருந்தாலும், அத்தகைய நீதிமன்றம், மத்தியஸ்தசபை, மன்றம், நபர் அல்லது அமைப்பு வழங்கும் எந்தவொரு தீர்ப்பு, தீர்வை, கட்டளை, தீர்மானம் அல்லது அபராதத்தை வாடகை பெறுநர் பொறுப்பேற்க வேண்டும்.

ஆ) வாடகை பெறுநர், குறித்த உபகரணத்திலிருந்து அல்லது அதன் பயன்பாடு, இயக்கம், களஞ்சியப்படுத்தலிலிருந்து அல்லது அவற்றின் குற்றச்சாட்டான பயன்பாடு, இயக்கம் அல்லது களஞ்சியப்படுத்தல் தொடர்பாக, வாடகை பெறுநர் அல்லது அவரது ஊழியர்கள் அல்லது முகவர்கள் மூலம் ஏற்படும், சம்பந்தப்படும் அல்லது அதனுடன் தொடர்புடைய எந்தவொரு இழப்பையும் உரிமையாளர் அனுபவிக்க நேரிடுமானால், அத்தகைய இழப்புகளிலிருந்தும் உரிமையாளரை எப்போதும் விடுவித்து, அவற்றுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். மேலும், உரிமையாளருக்கு எதிராக யாரேனும் ஒருவர் எந்தவொரு நீதிமன்றம், மத்தியஸ்தசபை, மன்றம், நபர் அல்லது அமைப்பு முன் மேற்கொள்ளும் நடவடிக்கை, வழக்கு அல்லது நடவடிக்கைமுறை தொடர்பாக உரிமையாளரின் வழக்குச் செலவுகள் மற்றும் எனைய செலவுகள் அனைத்தையும் வாடகை பெறுநர் பொறுப்பேற்க வேண்டும். அதுபோலவே, உரிமையாளருக்கு எதிராக வாடகை பெறுநருடன் கூட்டாக அல்லது வேறுவகையில் வழங்கப்பட்டிருந்தாலும், அத்தகைய நீதிமன்றம், மத்தியஸ்தசபை, மன்றம், நபர் அல்லது அமைப்பு வழங்கும் எந்தவொரு தீர்ப்பு, தீர்வை, கட்டளை, தீர்மானம் அல்லது அபராதத்தை வாடகை பெறுநர் பொறுப்பேற்க வேண்டும்.

## 5. காப்புறுதி

அ) சீஎப்.ஃ. இன்சூரன்ஸ் ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் வைக்கப்படும் உபகரணங்களுக்கான காப்பீட்டு ஒப்பந்தம் ஒன்றை உரிமையாளரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காப்பீட்டாளருடன் தனது செலவில் பெறவும், இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றவும், இந்த உடன்படிக்கையின் காலப்பகுதியில், கூறப்பட்ட காப்புறுதி உடன்படிக்கையை முழுமையாகவும் நடைமுறையிலும் வைத்திருப்பதற்கு அவை செலுத்த வேண்டியிருக்கும் போது, பெரும்பாலான காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான அனைத்து கட்டுப்பணத் தொகைகளையும் சரியான நேரத்தில் செலுத்தவும் வாடகை பெறுநர் இத்தால் ஒப்புக்கொள்கிறார்.

ஆ) வாடகை பெறுநர் உபகரணத்தை காப்பீடு செய்யத் தவறினால் அல்லது செலுத்த வேண்டிய காப்பீட்டு கட்டுப்பணத்தைச் செலுத்தத் தவறினால், விடயத்திற்கு ஏற்ப, உரிமையாளர்கள் உபகரணத்துக்கான காப்பீட்டு ஒப்பந்தம் ஒன்றைப் பெற்று பராமரிப்பதற்கு அல்லது வாடகை பெறுநரால் செலுத்த வேண்டியதாக இருந்தும் செலுத்தப்படாத எந்தக் காப்புறுதிக் கட்டுப்பணத் தொகையையும் செலுத்துவதற்கும், உரிமையாளர் வாடகை பெறுநரிடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு பணத்தையும் முதலில் உரிமையாளரால் செலுத்தப்பட்ட தொகையை பிரயோகிப்பதற்கு உரிமையாளர் உரித்துடையவர் ஆவார்.

இ) இதன் பிரிவு 5 இன் படி பெறப்பட்ட எந்தவொரு காப்புறுதி ஒப்பந்தத்துக்கும் செலுத்தப்படும் காப்பீட்டுத் தொகைகள், இந்த உடன்படிக்கையின் கீழ் வாடகை பெறுநர் உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளையும் செலுத்துவதற்கு முதலில் உரிமையாளரால் பயன்படுத்தப்படலாம், அவை திரண்ட வட்டி மற்றும் நிலுவைத் தொகைகள், மாதாந்த வாடகைகள் அல்லது வட்டி செலவுகள், கட்டணங்கள் அல்லது வேறுவிதமாக இருந்தாலும் சரி, மீதமுள்ள தொகை (ஏதேனும் இருந்தால்) அல்லது வாடகை பெறுநரால் அத்தகைய செலவு எதுவும் இல்லை என்றால், அத்தகைய காப்பீட்டுத் தொகைகள் அனைத்தும் பயன்படுத்தப்படும்:

i அந்தக் காப்பீட்டு பணம் முழுவதும், உபகரணத்திற்கு ஏற்படும் சேதத்தை மீட்க பயன்படுத்தப்படும். இங்கு, அந்தக் காப்பீட்டு பணம், மீட்கக்கூடிய சேதத்திற்கு வழங்கப்பட்டிருக்கும்போது மட்டுமே இது ஏற்புடையதாக இருக்கும்.

ii. உபகரணம் தொலைந்துவிட்டால், திருடப்பட்டால் அல்லது சரிசெய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்தால், உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையாக, இங்கு இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்ட மாதாந்த வாடகைச் சேர்க்கை, உபகரணம் இழந்த, திருடப்பட்ட அல்லது சேதமடைந்த (விடயத்திற்கு ஏற்ப) திகதியிலிருந்து அல்லது அதன் பின் காலத்தில் செலுத்தக்கூடிய தொகைகளை பொருந்தும் வகையில் பயன்படுத்தப்படும். மீதமுள்ள தொகை வாடகை பெறுநருக்கு வழங்கப்படும்.

ஆயினும், மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை ஈடுசெய்வதற்கான செலவை ஈடுசெய்வதற்கு அல்லது மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த மாதாந்த வாடகைக் கட்டணத்தை செலுத்துவதற்கு மீதமுள்ள காப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லாவிட்டால், பற்றாக்குறையின் தொகையை வாடகை பெறுநர் உடனடியாக உரிமையாளர்களுக்குக் கோரும்போது செலுத்த வேண்டும்

**6. வாடகை பெறுநரால் பணம் செலுத்தத் தவறுதல்**

உரிமையாளருக்குக் கிடைக்கும் ஏதேனும் ஏனைய பரிகாரங்களுக்கு பங்கம் இல்லாமல்,

அ) வாடகை பெறுநர் இந்த உடன்படிக்கையின் கீழ் செலுத்த வேண்டிய எந்தவொரு மாதாந்த வாடகை அல்லது ஏனைய தொகையையும் சரியான நேரத்தில் செலுத்தத் தவறினால், வாடகை பெறுநர் மாதத்திற்கு …… சதவீதம் (….) என்ற வீதத்தில், நிலுவைத் தொகையுடன் கூடுதலாக, அபராதமாக அல்லாமல், கலைக்கப்பட்ட இழப்பீடாக செலுத்த வேண்டும், மேலும் உரிமையாளர் சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகையை, இந்த உடன்படிக்கையின் கீழ் செலுத்த வேண்டிய எந்தவொரு தாமதமான வாடகை அல்லது ஏனைய தொகையையும் திரட்டப்பட்ட வட்டியுடன் சேர்த்துப் பயன்படுத்த உரிமையுடையவர் ஆவார்.

ஆ) இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தொகையையும் வாடகை பெறுநர் செலுத்தத் தவறினால், அதனை உரிமையாளர் தனது விருப்பப்படி செலுத்தியிருந்தால், உரிமையாளருக்கு அந்தத் தொகையையும் அதற்குச் சேர்ந்த வட்டியையும் (இருந்தால்), முதலில் அடைப்பதற்காக, வாடகை பெறுநரிடமிருந்து வாடகைத் தொகையாகப் பெறப்படும் எந்தவொரு பணத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை உண்டு.

இ) ஏதேனும் ஏனைய உடன்படிக்கைகள் தொடர்பாக வாடகை பெறுநரிடமிருந்து உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய எந்தவொரு தொகைக்கும் எதிராக, இந்த உடன்படிக்கையின் கீழ் உள்ள நிலுவைத் தொகையை விட அதிகமாக, உரிமையாளரால் பெறப்பட்ட எந்தவொரு தொகையையும் தீர்ப்பனவு செய்வதற்கு உரிமையாளருக்கு உரிமை உண்டு என்பதை வாடகை பெறுநர் இத்தால் ஒப்புக்கொள்கிறார் மற்றும் உடன்படுகின்றார்.

**7. நிதி உதவி**

வாடகை பெறுநரால் கோரிக்கை விடுத்தால், உரிமையாளரால் தீர்மானிக்கப்படுகின்றவாறு, வாடகை பெறுநருக்கு நிதி உதவியை வழங்கலாம். எனினும், உரிமையாளருக்கு அத்தகைய நிதி உதவியை வழங்குவதற்கு எவ்விதக் கடப்பாடும் இல்லை. அத்தகைய நிதி உதவி வழங்கப்படுவது, உரிமையாளரின் முழுமையான

தீர்மானத்திலும் உரிமையாளர் நிர்ணயிக்கின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் இருக்கும்.

## 8. அறிவித்தல்கள்

பின்வரும் நிகழ்வுகள் ஏதேனும் நிகழ்ந்தவுடன் அல்லது அத்தகைய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளது என வாடகை பெறுநருக்கு முதன்முதலில் தெரிந்தவுடன், வாடகை பெறுநர் உடனடியாக உரிமையாளருக்கு அறிவிக்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு உடையவராவார்:

அ) உபகரணம் வைக்கப்பட்டுள்ள முகவரி (இவ்வுடன்படிக்கையின் அட்டவணை ‘‘அ’’-இன் 7ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து மாற்றடைந்தால்), மேலும் அத்தகைய இடம் வாடகைக்கு எடுக்கப்பட்டதாகவோ அல்லது வாடகைக்கு விடப்பட்டதாகவோ இருந்தால், அங்குள்ள உரிமையளரின் பெயர் மற்றும் முகவரி.

ஆ) அட்டவணை ‘‘அ’’-இன் 6ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டபடி, உபகரணத்தை பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட நோக்கத்தில் மாற்றம் ஏற்பட்டால், அத்தகைய மாற்றத்தினால் உபகரணம் எதிர்கொள்ளக்கூடிய இடர்களில் ஏற்படும் மாற்றங்கள்.

இ) உபகரணத்தைச் சார்ந்த எந்தவொரு விபத்தோ, அல்லது ஏனைய சம்பவமோ ஏற்பட்டு, அதன் விளைவாக உபகரணத்திற்கு சேதம் ஏற்படல், வேறு எவையேனும் சொத்துகளுக்கு சேதம் ஏற்படல், அல்லது மூன்றாம் தரப்பினருக்கு உடல் காயம் ஏற்படல்.

ஈ) உபகரணம் காணாமல் போனாலோ, திருடப்பட்டாலோ, அல்லது உபகரணத்தின் பயன்பாட்டைச் சார்ந்த ஏதேனும் சூழ்நிலை ஏற்பட்டதனால், சட்டத்தின் செயல்பாட்டினால் உரிமையாளரின் உரித்து இடருக்குள்ளாகுமாயின், மேலும் உபகரணம் வாகனமாக இருந்தால், அதன் பயன்பாட்டினால் வாடகை பெறுநருக்கு அல்லது வாகன சாரதிக்கு எதிராக வழக்கு தொடரக்கூடிய ஏதேனும் நிகழ்வு அல்லது சூழ்நிலை ஏற்படுதல்.

உ) உபகரணம் வாகனமாக இருந்தால், மோட்டார் வாகனப் பதிவாளர் அல்லது ஏனைய தகைமையுடைய அதிகார சபையால் அதற்கான தனித்துவமான பதிவு இலக்கம் வழங்கப்படுதல் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட பதிவு இலக்கம் மாற்றப்படுதல்.

ஊ) உரிமையாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டவுடன், வாடகை பெறுநர் தம்முடைய நிதிநிலை தொடர்பான தேவையான விவரங்களையும், மேலும் உபகரணத்தின் இருப்பிடம், நிலை மற்றும் நிபந்தனை தொடர்பான விவரங்களையும் உரிமையாளருக்கு வழங்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு உடையவராவார்.

**9. வாடகை பெறுநரால் உடன்படிக்கையை முடிவுறுத்தல்**

அ) இவ்வுடன்படிக்கையின் கீழ் இறுதி கட்ட பணம் செலுத்தப்பட வேண்டிய நாளுக்கு முன்னதாக, வாடகை பெறுநர் குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்பாக எழுத்து மூலமாக உரிமையாளருக்கு அறிவித்தல் வழங்கி, உபகரணத்தையும் மற்றும் வாடகை பெறுநரிடம் உடமையிலுள்ள அதனைச் சார்ந்த அனைத்து ஆவணங்களையும் உரிமையாளரிடம் மீண்டும் ஒப்படைத்த பின்னர், கீழ்வரும் தொகைகளை உரிமையாளருக்கு செலுத்தி, இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்தலாம்:

i. இவ்வுடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை ''ஆ''-இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில், வாடகை-கொள்வனவு விலை தொடர்பாக வாடகை பெறுநர் செலுத்தாமல் நிலுவையிலிருக்கும் திரண்ட தொகைகள், மற்றும்

ii. மேற்கூறியபடி வாடகை பெறுநரால் இவ்வுடன்படிக்கை முடிவுறுத்தியதன் காரணமாக, சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உபகரணங்களின் கொள்வனவு விலையில் அரைவாசிக்கு சமமான தொகை.

ஆ) மேலே குறிப்பிடப்பட்டபடி உபகரணத்தை உரிமையாளருக்கு மீண்டும் ஒப்படைக்கும் போது, வாடகை பெறுநர், தன்னுடைய வசமுள்ள உபகரணத்தைச் சார்ந்த அனைத்து ஆவணங்களையும் உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், உபகரண உரிமையாளராக வாடகை பெறுநர் பதிவாகியுள்ள எந்தவொரு சட்டப்பூர்வ அதிகார சபையிலும் பதிவை இரத்துச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு உடையவராவார்.

இ) மேற்படி பிரிவு 9 (அ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை வாடகை பெறுநர் உரிமையாளருக்கு செலுத்தும் கடப்பாட்டை நிறைவேற்றினாலும், அத்தகைய செலுத்துதல், உரிமையாளருக்கு இச்சட்டத்தின் கீழ் அல்லது இவ்வுடன்படிக்கையின் கீழ் கிடைக்கக்கூடிய ஏனைய பரிகாரம் அல்லது பரிகாரங்கள் மீதான உரிமைக்கு பங்கமாக இருக்கமாட்டாது.

**10. உரிமையாளரால் உடன்படிக்கையை முடிவுறுத்தல்**

அ) இவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வாடகை பெறுநர் மாதாந்த வாடகைத் தொகையை செலுத்துவதில் ஒன்றுக்கும் மேற்பட்ட தவணை தவறுகளைச் செய்தால், உரிமையாளருக்கு, குறைந்தது இரண்டு (2) வாரங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக வாடகை பெறுநருக்கு அறிவித்தல் வழங்கி, இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமை உண்டு:

எவ்வாறாயினும், மேற்படி இரண்டு (2) வார காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர், வாடகை பெறுநர் நிலுவையில் உள்ள மாதாந்த வாடகைத் தொகையையும், இவ்வுடன்படிக்கையின் விதிமுறைகளின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வட்டியையும் முழுமையாக உரிமையாளருக்கு செலுத்தினால், உரிமையாளர் இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்தமாட்டார்.

ஆ) வாடகை பெறுநர், உபகரணம் தொடர்பில், இவ்வுடன்படிக்கையின் நியதிகளுக்கு முரணான ஏதேனும் செயலைச் செய்தாலோ, அல்லது இவ்வுடன்படிக்கையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினாலோ, உரிமையாளர் குறைந்தது முப்பது (30) நாட்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக வாடகை பெறுநருக்கு அறிவித்தல் வழங்கி, அத்தகைய மீறல் அல்லது செயலைக் குறிப்பிட்டு, இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

இப்பிரிவின் நோக்கத்திற்காக, பின்வரும் சூழ்நிலைகள் அனைத்தும், வாடகை உடன்படிக்கையை மீறியதாகக் கருதப்படும் என்பதை வாடகை பெறுநர் ஒப்புக்கொள்கிறார்:

i. உபகரணத்தை வாடகையாளரின் உடமையில் வைத்திருக்கத் தவறுதல்.

ii. உபகரணத்தை மாற்றம் செய்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு விதமாக ஒப்படைத்தல், அல்லது உரிமையாளரின் உரிமைகளுக்கு பாதிப்பு உண்டாக்கக்கூடிய ஏதேனும் ஏனைய செயலைச் செய்தல்.

iii. உபகரணத்தை நன்றாக பராமரிப்பதிலும், தக்க நிலைமையில் வைத்திருப்பதற்குத் தவறுதல்.

iv. அரசாங்க அதிகாரசபைகளின் சகல ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள், மற்றும் அத்தகைய உபகரணத்தின் பயன்பாட்டைச் சார்ந்த அனைத்து நாடாளுமன்றச் சட்டங்கள், நியதிச் சட்டங்கள் மற்றும் சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை வாடகை பெறுநர் கடைப்பிடிக்கத் தவறுதல், மற்றும் இவ்வுடன்படிக்கையின் பிரிவு 2 மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் ஏற்பாடுகளை மீறுதல்.

v. இவ்வுடன்படிக்கையின் பிரிவு 5 மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு II இன் ஏற்பாடுகளை மீறுதல்.

vi. இவ்வுடன்படிக்கையின் பிரிவு 7-ன் அடிப்படையில் நிதி உதவி பெறுவதற்காக உர-ிமையாளருடன் செய்யப்பட்ட உடன்படிக்கையில் வாடகை பெறுநர் தவணை தவறுதல் அல்லது மீறுதல்.

ஆயினும், எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மீறல் அல்லது செயல் வாடகை பெறுநரால் சரிசெய்யக்கூடியதாக இருந்தால், உரிமையாளர், முப்பது (30) நாட்கள் காலக்கெடுவுக்குள், அந்த மீறல் அல்லது தவறை சரிசெய்யுமாறு வாடகை பெறுநருக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய அறிவிப்பின் அடிப்படையில், வாடகை பெறுநர் முப்பது (30) நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அந்த மீறல் அல்லது செயலை சரிசெய்தால், உரிமையாளர், அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில், இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்தமாட்டார்.

இ) பிரிவு 10 இன் துணைப் பிரிவுகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றின் அடிப்படையில் உரிமையாளர் வாடகை பெறுநருக்கு வழங்கிய உடன்படிக்கை முடிவுறுத்தல் அறிவித்தலை, அவருக்கு எந்தவித காரணமோ, முன்னறிவிப்போ வழங்காமல், உரிமையாளர் விலக்கி வைக்கலாம், மேலும் இவ்வுடன்படிக்கையின் நியதிகளின் அடிப்படையில் வாடகை பெறுனருடன் தொடர்ந்து இவ்வுடன்படிக்கையைச் செயற்படுத்தலாம்.

ஈ) உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டவுடன், வாடகை பெறுநருக்கு உபகரணத்தை வைத்திருக்கும் அல்லது பயன்படுத்தும் எந்த உரிமையும் இருக்கமாட்டாது. வாடகை பெறுநர் உடனடியாக உபகரணத்தை உரிமையாளரின் தலைமையகத்திற்கோ / நகர அலுவலகத்திற்கோ அல்லது அருகிலுள்ள கிளைக்கோ மீண்டும் ஒப்படைக்க வேண்டும். வாடகை பெறுநர் உபகரணத்தை மீண்டும் ஒப்படைக்கத் தவறினால், உரிமையாளருக்கு எந்தவித முன்னறிவிப்போ அல்லது கோரிக்கையோ இன்றி, உடனடியாக உபகரணத்தின் உடைமையை மீளப் பெறும் உரிமை உண்டு.

i. உரிமையாளர் அல்லது உரிமையாளரின் முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர், உபகரணத்தின் உடைமையை மீண்டும் பெறும் முழு உரிமை உடையவராவார். அத்தகைய உடைமை மீட்பு நடவடிக்கைக்குத் தடை செய்யவோ, எதிர்ப்புத் தெரிவிக்கவோ வாடகை பெறுநருக்கு எந்த உரிமையும் இருக்கமாட்டாது என்பதோடு வாடகை பெறுநர் அத்தகைய எந்தவிதத் தடையையும் ஏற்படுத்தக்கூடாது என இத்துடன் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

### 11. அறிவித்தல் இன்றி முடிவுறுத்தல்

வாடகைக்காலம் தொடருகின்ற போது, பின்வரும் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்தால்,

அ) வாடகை பெறுநர் மரணமடைதல், அல்லது

ஆ) வாடகை பெறுநர் வங்குரோத்தான செயல் ஒன்றைப் புரிதல், அல்லது வங்குரோத்தானவர் என நீதிமன்றம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்படுதல் அல்லது அவர் வங்குரோத்தானவர் என்ற வகையில் அவரது சொத்து பறிமுதல் செய்வதற்கு மனுத் தாக்கல் செய்யப்படுதல், அல்லது

இ) வாடகை பெறுநர் தமது கடனாளர்களுடன் ஏதேனும் உடன்படிக்யையில் ஈடுபடுதல், அல்லது அவர்களுடன் சமரசம் செய்தல், அல்லது அவர்களின் நலனுக்காக தமது சொத்துக்களை ஒப்படைத்தல் அல்லது வாடகை பெறுநர் திவாலான நிலை.

ஈ) வாடகை பெறுநர் ஒரு நிறுவனம் என்றால், நிறுவனம் தன்னார்வத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒடுக்குவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுதல் அல்லது ஒரு நீதிமன்ற உத்தரவின் பேரில் நிறுவனம் ஒடுக்கப்படுவதற்கு கட்டளையொன்று பிறப்பிக்கப்படுதல்.

உ) உபகரணத்திற்கு எதிராக அல்லது வாடகை பெறுநரின் ஏனைய சொத்துகளுக்கு எதிராக எந்தவொரு அமுலாக்கம், பறிமுதல் அல்லது பறிமுதல் உத்தரவு பிறப்பிக்கப்படுதல் அல்லது உபகரணம் அடைமான உரிமையின்படி தடுத்து வைக்கப்படுதல்.

ஊ) உபகரணத்திற்கான தற்போதைய காப்பீட்டு ஒப்பந்தம் காப்பீட்டாளரால் இரத்துச் செய்யப்படுதல் அல்லது மீளப் பெறப்படுதல். மேற்கூறிய நிகழ்வுகள் ஏதேனும் நிகழ்ந்தவுடன், அத்தகைய வாடகை மேலும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி, தானகவே முடிவுறும்.

### 12. நியாயாதிக்கம்

வாடகை பெறுநர், உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய— அதாவது வாடகைத் தொகைகள், சேதங்கள், காப்பீட்டு கட்டணங்கள், பெறுமானத் தேய்வுக்கான இழப்பீடுகள் உள்ளிட்ட அனைத்து தொகைகளையும், முகவரி: இல. 84, ரஜ வீதி, கண்டி / இல. 270, வொக்சால் வீதி, கொழும்பு 02 என்ற உரிமையாளரின் தலைமை அலுவலகத்தில் /நகர அலுவலகத்தில் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு ஆனால் அவற்றை

வேறு அலுவலகங்களில் செலுத்த முடியாது. வாடகை பெறுநர் வேறு இடங்களில், அல்லது உரிமையாளரின் ஏனைய கிளைகள் மூலம், அல்லது ஏனைய வழிகளால் பணம் செலுத்தினாலும்,— உரிமையாளரின் தலைமையகம் / நகர அலுவலகத்தில் மட்டுமே செலுத்த வேண்டும் என்ற மேற்கூறிய கடப்பாடு மாற்றமின்றி நீடிக்கும். உரிமையாளர் அத்தகைய தொகைகளை வேறு இடங்களில் பெற்றுக்கொண்டாலும், அது வாடகையாளரின் கடப்பாட்டை விலக்கப்பட்டதாகவோ, மாற்றப்பட்டதாகவோ, அழிக்கப்பட்டதாகவோ கருதப்படமாட்டாது. மேற்கூறிய தொகைகள் ஏதேனும் தவறுதலால் செலுத்தப்படாத சூழலில், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய வழக்கெழு காரணம், உரிமையாளரின் தலைமையகம் / நகர அலுவலகம் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கப் பிரதேசத்தில் எழுந்ததாகக் கருதப்படும். இங்கு வழக்கெழு காரணம் எனக் குறிப்பிடப்படுவது, இவ்வுடன்படிக்கையின் கீழ் வாடகை பெறுநர் மீறிய கடப்பாடுகளை குறிக்கும், மேலும் அதனை அடிப்படையாகக் கொண்டு வழக்கு தொடரப்படலாம்.

**13. சாட்டுதல்**

உரிமையாளர், இவ்வுடன்படிக்கையின் கீழ் தமக்குள்ள உரிமை, உரித்து, அக்கறை மற்றும் கடப்பாடு என்பவற்றை, எவரேனும் ஏனைய நபருக்கு சாட்டுதல் செய்வதற்கான முழு உரிமையையும் கொண்டுள்ளார் என வாடகை பெறுநர் இத்தால் சம்மதத்தைத் தெரிவித்து உடன்படுகின்றார்.

**14. இதர விடயங்கள்**

அ) சட்டத்தின் பிரிவு 16(6)-இன் நோக்கத்திற்காக, உபகரணத்தின் பெறுமதியை நிர்ணயிக்கின்ற நபர், உரிமையாளர் நியமிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் அல்லது இலங்கை குத்தகை சங்கத்தில் (Leasing Association of Sri Lanka) பதிவு செய்யப்பட்ட எவரேனும் மதிப்பீட்டாளர் (valuer) ஆகியோரே உரிமையாளர் தெரிவுப்படி மதிப்பீடு செய்வார்கள் என இத்துடன் மேலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஆ) இவ்வுடன்படிக்கையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகள் மற்றும் இணைப்புகள் இவ்வுடன்படிக்கையின் பாகமாகக் கருதப்படும்.

இ) இவ்வுடன்படிக்கையின் ஏதேனும் பகுதி, நியதி அல்லது ஏற்பாடு, திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக, வறிதானதாக, செல்லுபடியற்றதாக, செயல்படுத்துவதற்கு இயலாததாக இருந்தால், மீதமுள்ள பிரிவு அல்லது பிரிவுகள், அவை தனியாகப் பிரிக்கப்பட்டதாகக் காணப்படும், என்பதோடு அவை அத்தீர்மானத்தால் பாதிப்புக்குள்ளாக மாட்டாது, என்பதோடு அதேசமயம், அத்தகைய வறிதான, செல்லுபடியற்ற அல்லது செயற்படுத்த முடியாத குறிப்பிட்ட பகுதி, நியதி அல்லது ஏற்பாடுகள் இவ்வுடன்படிக்கையில் இல்லாததாகக் கருதி, இரு தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள், பொருள்கொள்ளப்படும் மற்றும் அமுல்படுத்தப்படும்.

**தமிழ் மொழிபெயர்ப்பு**

## அட்டவணை (அ)

**விடயம் (1): வாடகை பெறுநரின் விபரங்கள்**

வாடகை பெறுநரின் பெயர்:

தேசிய அடையாள அட்டை இலக்கம்:

வதிவிட முகவரி:

**விடயம் (2): உபகரணத்தின் விபரம்**

உபகரண வகை மற்றும் மாதிரி

வாகன உடற்பாகத்தின் வகை

இயந்திரம் இலக்கம் சீடீஈ(CDE) அடிச்சட்டக இல. டீஏவீ(DAV)

உபகரணத்துடன் தொடர்புடைய உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள்

இந்த உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தியதாகும் ($02^{nd}$ Hand) ஆகும் மற்றும் வாடகை பெறுநர் அதனை ஒப்புக்கொள்கிறார்.

**விடயம் 3** வாடகை பெறுநருக்கு பணரீதியான விலை தெரிவிக்கப்பட்ட திகதி:

**விடயம் 4** உபகரணத்தின் விற்பனையாளர்/விநியோகத்தர்:

**விடயம் 5** விற்பனையாளரால்/விநியோகத்தரால் விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திகதி:

**விடயம் 6** உபகரணத்தை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நோக்கம்:

**விடயம் 7** உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட்டு வைக்கப்பட வேண்டிய இடம்:

**விடயம் 8** வாடகைக்கான காலம்: பற்றுச் சீட்டை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து …(…..) மாதங்கள்

**தமிழ் மொழிபெயர்ப்பு**

## அட்டவணை (ஆ)

பின்வரும் விடயங்கள் தொடர்பாக முன்மொழியப்பட்ட வாடகை-கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் உங்கள் (வாடகை பெறுநரின்) நிதிக் கடப்பாடுகளின் சுருக்கம்

**விடயம் 1:** பொருட்களின் காசுக்கொள்வனவு விலை:

நிறுவுதல் கட்டணங்கள்:

**மொத்தம்:**

**விடயம் 2:** நியதிச் சட்டக் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகை உட்பட வாடகை-கொள்வனவு விலை:

**விடயம் 3**: வாடகை-கொள்வனவு விலையில் பின்வரும் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன:

(அ) கப்பலில் கொண்டுவருதுல் கட்டணங்கள் (வாடகை பெறுநருக்கு அல்லது வாடகை பெறுநரின் கட்டளைக்கு பொருட்களை விநியோகிப்பதற்கான செலவு அல்லது)

(ஆ) பதிவுக் கட்டணம் அல்லது ஏனைய சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டியவை

(இ) காப்பறுதி

(ஈ) நிறுவுதல் கட்டணங்கள்

(இ) வியாபாரப் புரள்வு வரி அல்லது ஏனைய வரிகள்

**விடயம் 4:** செலுத்த வேண்டிய தவணைக்கொடுப்பனவுகள் மற்றும் அத்தகைய தவணைக்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய இடைவெளி பின்வருமாறு: உரிமையாளரால் தலைமை அலுவலகத்தில்/நகர அலுவலகத்தில் மாதாந்தம் ரூபாய் [………………..] தொகை வாடகை ……….. […….] செலுத்தப்பட வேண்டும் என்பதோடு முதலாவது வாடகைத் தொகை ஏற்பனவுப் பற்றுச்சீட்டு வழங்குகின்ற திகதியில் அல்லது இவ்வுடன்படிக்கையைக் கைச்சாத்திடுகின்ற திகதியில் செலுத்த வேண்டும்.

**விடயம் 5**: உரிமையாளரின் எழுத்துமூல சம்மதத்துடன் நீங்கள் வாடகை-கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் உங்கள் உரிமைகளை சாட்டுதல் செய்யலாம், மேலும் அவர் தனது சம்மதத்தை நியாயமற்ற முறையில் மறுக்கக்கூடாது.

**விடயம் 6**: திருத்தப்பட்டவாறான, 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் பிரிவு 7 இன் அடிப்படையில் எந்த நேரத்திலும் தள்ளுபடியுடன் பொருட்களை வாங்க உங்களுக்கு உரிமை உண்டு.

**விடயம் 7**: திருத்தப்பட்டவாறான, 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் பிரிவு 8 இன் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, உங்கள் சொந்த செலவில் பொருட்களை உரிமையாளரிடம் திருப்பி அனுப்புவதன் மூலம் எந்த நேரத்திலும் வாடகை- கொள்வனவு உடன்படிக்கையை முடிவுறுத்திக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

இதற்கு அத்தாட்சியாக, இவ்வுடன்படிக்கையின் தரப்பினர்கள் இந்த இதிலும் மற்றும் இதனையொத்த மற்றொரு பிரதியிலும் தைங்கள் வழக்கமான கையொப்பங்களை இட்டு …………...ஆம் திகதி இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றியுள்ளனர்:

உரிமையாளர் நிறுவனத்தின் சார்பாக கையொப்பமிடப்பட்டது

…………………………………...
பணிப்பாளர்/தலைமை நடவடிக்கை அதிகாரி

இது கணினியில் உருவாக்கப்பட்ட கையொப்பமாகும், இதற்கு சாட்சிகள் தேவையில்லை

கொழும்பில் இருந்து வாடகை பெறுநருக்காகவும் அவர் சார்பாகவும் பின்வரும் சாட்சியாளர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது:

சாட்சி

பெயர்

முகவரி

கையொப்பம்

**இணைப்பு 1**

உபகரணங்களின் பயன்பாடு

அ) வாடகை பெறுநர் இதுபோன்ற உபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக உருவாக்கப்பட்ட சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க வேண்டும். குறிப்பு: தெளிவுக்காக, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் அவற்றின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் மாகாண சபைகளால் சட்டமாக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் ஆகியவை அடங்கும்.

ஆ) உரிமையாளரால் வாடகை பெறுனருக்கு உபகரணங்கள் உரிமையாளருக்குச் சொந்தமானது என்று கூறும் லேபிள்கள், தகடுகள் அல்லது ஏனைய அடையாளங்களை உபகரணங்களில் ஒட்டுமாறு அறிவுறுத்தினால், வாடகை பெறுநர் தனது சொந்த செலவு மற்றும் கிரயத்தில் அத்தகைய அறிவுறுத்தலைப் பின்பற்ற வேண்டும்.

இ) வாடகை பெறுநர் உபகரணம் அல்லது அதைப் பயன்படுத்துவதற்கான தொடர்பில் விதிக்கப்பட்ட அனைத்து அபராதங்களையும், ஏதேனும் உரிமக் கட்டணங்களையும், பதிவு கட்டணங்களையும், வரிகளையும் மற்றும் எனைய செலவுகளையும் காலம்தாழ்த்தாமல் செலுத்த வேண்டும். மேலும், இத்தகைய கட்டணங்கள், கட்டாயக் கட்டணங்கள், வரிகள் அல்லது செலவுகள் செலுத்தப்படாததற்காக உரிய அதிகார சபைகளால் விதிக்கப்படும் அபராதங்களையும் செலுத்த வேண்டும். மேற்கண்டவைகளில் ஏதேனும் உரிமையாளர் செலுத்தியிருந்தால், வாடகை பெறுநர் உரிமையாளருக்கு அந்த தொகையை முழுமையாகவும் உடனடியாகவும், உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் திருப்பிச் செலுத்த வேண்டும்

**பராமரிப்பு**

அ) வாடகை பெறுநர் சகல சந்தர்ப்பங்களிலும் உபகரணங்களை நல்ல செயல்பாட்டு நிலையிலும் இயங்குகின்ற நிலையிலும் பராமரிக்க வேண்டும், மேலும் தேவைப்படும் போதெல்லாம் அதை திருத்தம் மேற்கொள்ள வேண்டும், மேலும் அதன் பயன்பாடு, சேவை மற்றும் பராமரிப்பு தொடர்பான உற்பத்தியாளரின் பரிந்துரைகளையும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

ஆ) வாடகை பெறுநர், தனது சொந்தச் செலவிலும் பொறுப்பிலும், உபகரணத்தின் அனைத்து பகுதிகளையும் மற்றும் உதிரிப் பாகங்களையும் தேவையானபோது மாற்றிக் கொள்ள வேண்டும், உபகரணத்தைப் பழுது பார்க்க வேண்டும் வழக்கமான மற்றும் விசேடமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் மேலும் இக்கட்டுரையின் முந்தைய பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக தேவையான அனைத்து பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல்களையும் செய்து முடிக்க வேண்டும். குத்தகை

பெறுநர் முன்கூட்டியே உரிமையாளரின் எழுத்து மூலமான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாத வரை, வாடகையாளர், தேய்வடைந்த அல்லது சேதமடைந்த பகுதிகள் அல்லது உதிரிப் பாகங்களை, உபகரணத்தின் மூல உற்பத்தியாளர் வழங்கிய அல்லது பரிந்துரைத்த பாகங்களைக் கொண்டே பதிலீடு செய்து கொள்ள வேண்டும்.

**மாற்றங்கள்**

அ) உரிமையாளரின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல், வாடகை பெறுநர் உபகரணங்களில் ஏதேனும் சேர்த்தல், மேம்பாடுகள் அல்லது மாற்றங்களைச் செய்யக்கூடாது அல்லது அதன் பணி ஒழுங்கு, செயல்பாடு அல்லது தரத்தில் மாற்றங்களைச் செய்யக்கூடாது.

ஆ) வாடகை பெறுநர் உரிமையாளரின் ஒப்புதல் இல்லாமல் உபகரணங்களில் சேர்த்தல் அல்லது மேம்படுத்தலை மேற்கொண்டால் வாடகை பெறுநர் உரிமையாளரால் அவ்வாறு செய்யக் கோரப்பட்டவுடன், வாடகைதாரரின் செலவு மற்றும் கிரயத்தில் அத்தகைய சேர்த்தல் அல்லது மேம்படுத்தலை அகற்ற வேண்டும்.

இ) உபகரணங்களில் செய்யப்படும் எந்தவொரு சேர்த்தல், மேம்பாடு அல்லது விளக்கங்கள் (உரிமையாளரின் ஒப்புதலுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) உபகரணங்களின் ஒரு பகுதியாகக் கருதப்படும், மேலும் உரிமையாளர் அதற்கு எந்த இழப்பீடும் செலுத்த வேண்டிய அவசியமின்றி உரிமையாளருக்குச் சொந்தமானதாக இருக்கும்.

**உபகரணத்தின் பொருத்துதல் அல்லது இணைத்தல்**

அ) உரிமையாளரின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல், வாடகை பெறுநர் உபகரணங்களை அசையாச் சொத்தில் இணைக்கவோ அல்லது பொருத்தவோ கூடாது. வாடகை பெறுநர் அசையாச் சொத்தில் உபகரணங்களை இணைப்பதோ அல்லது பொருத்துவதோ உபகரணங்களை நிரந்தர சாதனத்தின் ஒரு பகுதியாக மாற்றாது என்பதை வாடகை பெறுநர் ஒப்புக்கொள்கிறார்.

ஆ) வாடகை பெறுநர், உபகரணத்தை நிலையான சொத்தில் பொருத்துவதற்கு அல்லது இணைப்பதற்கு உரிமையாளரின் அனுமதியை கோருகின்ற பட்சத்தில், அத்தகைய நிலையான சொத்தின் உரிமையாளர் அல்லது சொந்தக்காரர் அந்த உபகரணத்தை அச் சொத்தின் நிரந்தரப் பொருளில் அல்லது அச்சொத்தில் ஒன்றுபட்ட பகுதியாகக் கருதமாட்டேன் என்று ஒப்புக்கொள்ளும் எழுத்து மூல அனுமதி அல்லது சான்றிதழை வாடகை பெறுநர் உரிமையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இ) வாடகை பெறுநர் இதன் மூலம் உரிமையாளருக்கு, உபகரணங்கள் தற்போதைக்கு வைக்கப்படும் வளவு தொடர்பில் செலுத்த வேண்டிய அனைத்து வாடகைகள் மற்றும் ஏனைய வெளியேற்றங்களை முறையாகச் செலுத்துவதாகவும், அத்தகைய வாடகை மற்றும் ஏனைய வெளியேற்றங்கள் தொடர்பாக அப்போதைய சமீபத்திய கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு அல்லது பற்றுச்சீட்டுக்களை உரிமையாளரிடம் கோரும் போது வழங்குவதாகவும் உறுதியளிக்கிறார்.

**இணைப்பு 2**

உபகரணத்தின் காப்பீடு தொடர்பான விடயங்கள்

1. வாடகை பெறுநர், உடன்படிக்கையின் முழு காலம் மற்றும் அதற்கான எந்த நீடிப்புகளும் நீடிக்கும் காலப்பகுதியிலும், உரிமையாளர் குறிப்பிடும் குறைந்தபட்ச நிபந்தனைகள் மற்றும் காப்பீட்டு பாதுகாப்பை விடக் குறையாத விதிமுறைகளும் பாதுகாப்பும் உடைய காப்பீட்டை முழு வலிமையுடன் வைத்திருக்க வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டும். அதற்குட்பட்ட வகையில்,

அ) இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னர் பெறப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறையாத அளவில் காப்பீடு எடுக்கப்பட வேண்டும், மேலும் எந்தச் சூழலிலும் அத்தகைய மதிப்பீடு, உபகரணத்தின் முழுமையான சந்தை மதிப்பை விடக் குறையக்கூடாது, மேலும்

ஆ) உபகரணம், விபத்து, தீ, திருட்டு, கலகம் அல்லது உள்நாட்டு கலவரம் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய இழப்பு அல்லது சேதத்திற்கும், மேலும் 'மோட்டார் போக்குவரத்து சட்டம்' விதிகளின்படி மூன்றாம் தரப்பினருக்கான அபாயங்களுக்கும் எதிராகக் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. வாடகை பெறுநர் தேவையானதாகக் கருதும் மேலதிக காப்பீட்டு பாதுகாப்பு வரம்புகளைப் பெறுவது வாடகை பெறுநரின் பொறுப்பாகும் மேலும், அவ்வாறு பெறத் தவறியதன் காரணமாக, இவ்வுடன்படிக்கையின் கீழ் வாடகை பெறுநருக்கு இருக்கின்ற எந்தப் பொறுப்புகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்படமாட்டார்.

3. காப்பீட்டு நியதிகள் மற்றும் நிபந்தனைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதும், உபகரணங்கள் வெளிப்படும் இடர்களிலிருந்து ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் உரிமையாளரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவருவதும் வாடகை பெறுநரின் பொறுப்பாகும்.

4. காப்பீட்டு ஒப்பந்தத்தில் உரிமையாளரே காப்பீட்டு ஒப்பந்தத்தின் பயனாளி என்பதற்கான ஒப்புதலை வாடகை பெறுநர் பெற வேண்டும். எனவே, குறிப்பிடப்பட்ட காப்பீட்டுக் ஒப்பந்தத்தின் கீழ் வாடகை பெறுநரால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டால், வாடகை பெறுநர் அது தொடர்பான அனைத்து காப்பீட்டு வருமானங்களையும் பெற உரிமையாளருக்கு உதவுவார்.

5. வாடகை பெறுநர், உபகரணங்கள் தொடர்பாக பெறப்பட்ட காப்பீட்டு ஒப்பந்தம் தொடர்பாக செலுத்தப்பட்ட கட்டுப்பணத்திற்கான பற்றுச் சீட்டுக்களையும் மற்றும் தற்போதைய காப்பீட்டுச் சான்றிதழையும் உரிமையாளரால் கோரப்படுகின்ற போது ஆய்வு செய்வதற்காக உடனடியாக வழங்க வேண்டும்.

6. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு திட்டத்தின் கீழ் வாடகை பெறுநர் நட்டஈட்டை மீட்கத் தவறினாலும், அதனால் இவ்வுடன்படிக்கையின் கீழ் வாடகை பெறுநருக்கான பொறுப்பான கடமைகளிலிருந்து அவர் விடுவிக்கப்படமாட்டார்.

7. காப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு கோரிக்கை விடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், வாடகை பெறுநர் உடனடியாக காப்பீட்டாளர் மற்றும் உரிமையாளருக்கு அத்தகைய சம்பவம் குறித்து அறிவித்து, அத்தகைய காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடனும் அவற்றின் பிரதிகளை உரிமையாளருக்கு வழங்குவதுடன், ஒரு கோரிக்கையை காப்புறுதி வழங்குநருக்கு உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே தரப்பட்ட தமிழ்மொழிபெயர்ப்பு சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.